தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் விருதுநகர் மாவட்டம் (இருப்பு ) ஸ்ரீவில்லிபுத்தூர்

PRESENT : Tmt.M.Breetha.,M.L.,
Chief Judicial Magistrate, Srivilliputtur.

2024 ஆம் வருடம் ஜனவரி மாதம் 30ம் தேதி செவ்வாய்கிழமை.

ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.669/2023

தமிழ்நாடு அரசின் பிரதிநிதி,
உதவி இயக்குநர்-I,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
விருதுநகர். ... குற்றமுறையிடுபவர்

- எதிர் -

ரா.தனசேகரன் ... குற்றம் சாட்டப்பட்டவர்

குற்றச்சாட்டு : (1) தொ.ச.பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(x),
(2) தொ.ச.பிரிவு 41 விதி 61 G,
(3) தொ.ச.பிரிவு 88A விதி 96(3) மற்றும் உடன்பிரிவு 92-ன்படி

*******

இவ்வழக்கு 04.10.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் உதவி இயக்குநர்-I, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், விருதுநகர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.ஜெயராம் அவர்கள் ஆஜராகியும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

கடந்த 19.03.2022 அன்று பிற்பகல் 02.30 மணியளவில் வாதி விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், கோவில்வீரார்பட்டி கிராமத்தில் எதிரிக்குச் சொந்தமான அழகர்சாமி பயர் ஒர்க்ஸை ஆய்வு செய்தபோது பட்டாசு தொழிற்சாலையில் திரு.பெரியசாமி வயது 44, த/பெ.பொன்னுச்சாமி என்ற அலுமினிய மருந்துக்கலவையை நிரப்பும் தொழிலாளர் போர்மேன் உதவியின்றி முந்தைய தின கழிவு சோர்சா வெடிகளை தொழிற்சாலையில் உள்ள எரிகுழியில் மொத்தமாக கொட்டி தீ வைத்ததால் வெடித்த கழிவு பட்டாசுகள் தீப்பற்றி அறை எண்.6-ல் இருப்பு வைக்கப்பட்டிருந்த கருந்திரிகளில் தீப்பிடித்து அவ்வறை முழுவதும் வெடித்து சிதறி தரைமட்டமாகியுள்ளதையும், அறை எண்.5-ன் கதவுகள் சேதமடைந்துள்ளதையும் ஆய்வின்போது கண்டறியப்பட்டது. தொழிற்சாலையில் அறை எண்.6-ல் 36 தூக்குகளில் 108 கிலோ கருந்திரிகள் மற்றும் 1 அட்டைப்பெட்டியில் 15 கிலோ கருந்திரிகள் இருப்பு வைக்கப்பட்டிருந்ததால் தீ விபத்தின்போது கருந்திரிகளில் தீப்பற்றி உண்டான வெப்பத்தால் அவ்வறை முழுவதும் வெடித்து சிதறி தரைமட்டாகியுள்ளதை ஆய்வின்போது கண்டறியப்பட்டது. தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்து குறித்தான படிவம் எண்.18-ன்படியான விபத்து அறிக்கை எதுவும் விபத்து நடந்த 12 மணி நேரத்திற்குள் விருதுநகர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்-I அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்பதை ஆய்வின்போது கண்டறியப்பட்டது. எதிரியின் செயல் தொழிற்சாலைகள் சட்டம் 1948 (உடன் திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950ன்படி முரணானது என்று எதிரி மீது வாதி தொழிற்சாலைகள் சட்டப் பிரிவுகள் (1) பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(x), (2) பிரிவு 41 விதி 61 G, (3) பிரிவு 88A விதி 96(3) மற்றும் உடன்பிரிவு 92-ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளார்.

2. புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரியின் வழக்குரைஞர் ஆஜரானார். எதிரி தரப்பில் சரண்டர் மனுவும், பிடியாணை திரும்ப பெற மனுவும், குற்ற ஒப்புதல் மனுவும், வழக்கு முன்கூட்டி எடுக்க மனு தாக்கல் செய்து ஏற்பு, அதன்படி வழக்கு இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. எதிரி தரப்பில் குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. குற்றமுறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு முறையாக வழங்கி குற்றம் பற்றி எடுத்துக் கூறி வினவியபோது எதிரியின் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டு எதிரி குற்றவாளிதான் என்று கூறினார்.

4. எதிரியின் தம்மிச்சையான குற்ற ஒப்புதலை கருத்தில் கொண்டு எதிரி தொழிற்சாலைகள் சட்டம் 1948 (உடன் திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950ன்படி பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(x) மற்றும் உடன்பிரிவு 92ன்படி குற்றவாளி என்று தீர்மானித்து ஷை குற்றத்திற்கு எதிரிக்கு அபராதம் ரூ.5000/- விதித்தும் கட்டத் தவறினால் 1 வாரம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், பிரிவு 41 விதி 61 G மற்றும் உடன்பிரிவு 92ன்படி குற்றவாளி என்று தீர்மானித்து ஷை குற்றத்திற்கு எதிரிக்கு அபராதம் ரூ.5000/- விதித்தும் கட்டத் தவறினால் 1 வாரம் மெய்க்காவல் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், பிரிவு 88A விதி 96(3) மற்றும் உடன்பிரிவு 92-ன்படி குற்றவாளி என்று தீர்மானித்து ஷை குற்றத்திற்கு எதிரிக்கு அபராதம் ரூ.5000/- விதித்தும் கட்டத் தவறினால் 1 வாரம் மெய்க்காவல் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், உத்தரவிடப்படுகிறது.

மொத்த அபராத தொகை ரூ.15000/-.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

தலைமை நீதித்துறை நடுவர்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

<u>இணைப்பு</u> : இல்லை.

தலைமை நீதித்துறை நடுவர்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.